**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் -**

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2015 சனவரி 01 முதல் 2015 நவம்பர் 30 வரையான காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 யூன் 06 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2276 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் தேசிய திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைசசு நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வட மத்திய மாகாணத்தின் கிராமிய பகுதிகள், மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் பொலநறுவை என்பவற்றின் நகரப்பகுதிகள என்பவற்றில் வசிக்கின்ற 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் 32,572 மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் என்பவற்றுடன் நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இலங்கையின் இயலளவை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். ஆரம்பத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2003 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 1993 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 5,803 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.29 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் 2007 யூன் 06 ஆம் திகதிய 2276 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 4,336 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39.81 மில்லியன் குறைநிரப்பு கடன் வசதியொன்னை அனுமதித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2010 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டு செயற்திட்டக் காலப்பகுதி 2014 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்ந்திருந்ததுடன் 2015 நவம்பர் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக்

கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல்களிற்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2015 நவம்பர் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க 2015 நவம்பர் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும். மேலும், கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள்வியாளர் உடன்படிக்கை அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளுடன் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களால் மேற்குறிப்பிடப்பட்ட வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மற்றும் மீளாய்வு காலப்பகுதிக்கான மற்றும் 2015 நவம்பர் 30 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மீளாய்வு காலப்பகுதியின் போதான | | 2015 நவம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 48.80 | 5,323 | - | - | 48.80 | 5,490.94 |
| இலங்கை அரசாங்கம் | 41.87 | 4,568 | 0.64 | 87.52 | 38.24 | 4,382.63 |
| **மொத்தம்** | **90.67** | **9,891** | **0.64** | **87.52** | **87.04** | **9,873.57** |

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் 2015 வருடாந்த பாதீட்டில் செயற்திட்டத்தின் நடவகடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவலின்படி, ஹம்பாந்தோட்டை மட்டக்களப்பு நகரங்களில் உயர்த்தப்பட்ட கோபுரங்களின் நிர்மாணம், தலைமை வேலைகள், நிலத்து நீர் பரிமாற்றங்கள், மற்றும் சுத்திகரிப்பு பொறிகள் மற்றும் குழாய் வழங்கி பொருத்துதல் மற்றும் திருயோணமலையில் மூதூரில் கழிவு நீர் வடிகால்களின் நிர்மாணம் என்பவற்றிற்கான 04 ஒப்பந்தங்கள் 125 நட்கள் தொடக்கம் 710 ரட்கள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் 2015 நவம்பர் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளவில் உயர்த்தப்பட்ட கோபுரத்தின் நிர்மாண வேலைகள் 2012 ஏப்ரலில் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும், உரிய காணி 2016 ஒக்தோபர் வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிற்கு உடமையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய டிஎம்ஏ/2010(5) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் முறைப்படி நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**3.5. செயற்திட்ட நடவடிக்கைகளின் முடிவுறுத்தல்**

செயற்திட்டத்தின் காலப்பகுதி 2015 நவம்பர் 30 இல் உள்ளவாறு மூடப்பட்டிருந்த போதிலும், அமுலாக்கல் முகவர் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை கையளிப்பதற்கு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் கணக்கொழிப்பு நோக்கத்திற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.